




ஏற்கெனவே பார்த்தோம். லஷ்கரின் செயல்திட்டத்தில் காஷ்மீர் மட்டும் இருந்ததில்லை. அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம், ரஷ்யா, சீனா உள்பட நினைத்துப் பார்க்க முடியாத சில ஆசியப் பிராந்தியங்களிலும் இஸ்லாமிய ஆட்சியை நிறுவும் கனவுடன் தொடங்கப்பட்ட இயக்கம் அது.

ஆனாலும் லஷ்கர் என்றால், காஷ்மீர் மட்டும் என்று ஏன் ஆனது? எப்போது இது உறுதிப்பட்டது? மிகவும் கவனமாக அணுக வேண்டிய இடம் இது. லஷ்கருக்குச் சற்றேறக்குறைய சம பலம் படைத்த இன்னொரு பாகிஸ்தான் தீவிரவாத இயக்கமான ஜெய்ஷ் ஏ முஹம்மதுவின் செயல்திட்டத்தில் காஷ்மீருக்கு ஐம்பது சதவிகிதம், அயோத்திக்கு ஐம்பது சதவிகிதம் இட ஒதுக்கீடு இருக்கிறது. ஏனைய எந்த பாகிஸ்தான் இயக்கத்தை எடுத்துக் கொண்டாலும் குறைந்தது ஒன்றுக்கு மேற்பட்ட லட்சியங்களை வைத்துக் கொண்டுதான் அவர்கள் இந்திய எல்லைக்குள்ளேயே ஊடுருவுகிறார்கள்.

லஷ்கர் மட்டும்தான் காஷ்மீர், காஷ்மீர் என்று ஒரே நாம ஜபத்தைச் செய்துகொண்டிருக்கிறது. முந்தைய அத்தியாயங்களில் நாம் பார்த்த லஷ்கர் போராளிகளின் சுப்ரீம் கமாண்டரான மௌலானா ஒரு காஷ்மீரி என்பதால் மட்டுமா? ம்ஹூம். அதுவல்ல காரணம். இந்தியாவின் மீது அவர்கள் கோபம் கொள்வதற்கு காஷ்மீரும் ஒரு காரணம். ஆனால், அது மட்டுமே அல்ல.

சொன்னால் கொஞ்சம் வியப்பாக இருக்கும். லஷ்கரின் காஷ்மீர் காதலுக்கு இந்தியாவின் மீதுள்ள கோபமல்ல காரணம். மாறாக, பாகிஸ்தான் மீதான கோபம்தான் அடிப்படை. இத்தனைக்கும் காஷ்மீரை இந்தியாவிடமிருந்து மீட்டு பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டுமென்பதுதான் அவர்களது நோக்கம். ஜே.கே.எல்.எஃப். மாதிரி தனியாவர்த்தனக் கனவெல்லாம் கிடையாது. அதனால்தான், பாகிஸ்தான் அரசும் உளவுத்துறையும் லஷ்கரை வருஷக் கணக்கில் தாங்கு தாங்கென்று தாங்கிப் பிடித்தன.

ஆனால் என்ன கோபம்?

காரணம் இருக்கிறது. கார்கிலில் தொடங்கும் காரணம் அது.

கார்கில் யுத்தத்தின் தொடக்கத்துக்கு முந்தைய தினம் வரை லஷ்கரின் செயல்திட்டங்களில் காஷ்மீரும் ஒன்று. ஆனால், யுத்தத்தின் இறுதியில் மற்ற எதுவுமே அநாவசியம், காஷ்மீர் ஒன்றுதான் ஆகப்பெரிய லட்சியம் என்று முடிவுசெய்தது லஷ்கர் இ தொய்பா.

நடந்த சம்பவங்களைக் கொஞ்சம் நினைவுபடுத்திப் பார்க்கலாமா?



காஷ்மீருக்காக இதுவரை நிகழ்ந்துள்ள மூன்று பெரிய, முழுநீள யுத்தங்களுள், நமக்கு நன்றாக நினைவிருக்கக்கூடியதும், நமது தேசிய உணர்வை மிக அதிகம் தட்டிப் பார்த்ததும் கார்கில்தான். இதில் சந்தேகமிருக்க முடியாது.

அது ஓர் இசகுபிசகான சந்தர்ப்பம். ஒரு பக்கம் வாஜ்பாயுடன் நல்லுறவு வளர்க்கிறேன் பேர்வழி என்று பஸ்ஸெல்லாம் விட்டு, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, ஊரெல்லாம் தோரணம் கட்டி, படு பயங்கரமாக ஸ்டண்ட் அடித்துக் கொண்டிருந்தார் அப்போதைய பாக். பிரதமர் நவாஸ் ஷெரீ∴ப். இந்தப் பக்கம் வாஜ்பாய் பஸ் ஏறி பாகிஸ்தான் போய்ச் சேருவதற்கு முன்னால், அந்தப் பக்கம் கார்கில் எல்லைப்புறச் சிகரங்களின் வழியே ஊடுருவல் உற்சவத்தை ஆரம்பித்துவிட்டார் பாக். ராணுவத் தளபதியாக (மட்டும்) அப்போதிருந்த ஜெனரல் பர்வேஸ் முஷர∴ப்.

நவாஸ் ஷெரீ∴பின் நோக்கம், சர்வதேச அரங்கில் ஒரு நல்ல பையன் இமேஜைப் பெறுவது. பர்வேஸ் முஷர∴பின் நோக்கம், நவாஸ் ஷெரீ∴பை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கி, மக்களே அவரைப் பதவி நீக்கம் செய்யும்படி செய்துவிட்டுத் தான் ஆட்சியைப் பிடிப்பது. வாஜ்பாயிக்குப் பிரமாதமான நோக்கமெல்லாம் இருந்திருக்க நியாயமில்லை. தற்செயலாக வந்து சேர்ந்த ஒரு பாகிஸ்தான் சுற்றுலா. அவ்வளவுதான்.

ஆனால், அகப்பட்டது கார்கில்.

கூலிப்படையினரை முதலில் ஊடுருவச் செய்து, பின்னால் அவர்களுக்கு உதவியாக ராணுவத்தினரை அனுப்புவதென்பது, ஆதிகாலம் முதல் பாகிஸ்தானின் ஸ்டைலாக இருந்து வருவது. 1948-ம் ஆண்டு நடைபெற்ற முதல் காஷ்மீர் யுத்தத்தின்போதுகூட இப்படித்தான் செய்தார்கள்.

கூலிப்படை என்று நாம் பயன்படுத்தும் சொல்லை, பொதுவில் பாகிஸ்தான் அதிபர்களும் ராணுவத் தளபதிகளும் பிரதமர்களும் அவ்வளவாக விரும்பமாட்டார்கள். சமீபத்தில் வெளியாகியிருக்கும் பர்வேஸ் முஷர∴பின் சுய சரிதை நூலைப் (In the Line of Fire) படித்துப் பாருங்கள். இந்தக் கூலிப் படையினரை அவர் சுதந்திரப் போராட்டத் தியாகி'கள் என்றே வருணிக்கிறார். அதாவது, காஷ்மீர் சுதந்திரத்திற்காகப் போராடும் தியாகிகள் என்று அர்த்தம். தியாகிகள் என்றால், முழங்கை வரை தொளதொளத்த கதர்ச் சட்டையும், முழங்கால் வரை ஊசலாடும் நாலு முழக் கதர் வேட்டியும், தலைக்கு மேலே ஒரு குல்லாயும், சட்டை பாக்கெட் பக்கத்தில் ஒரு மூவர்ணக் கொடியுமாக மனத்துக்குள் ஒரு பிம்பம் எழுந்தால் டஸ்டர் வைத்து அழிக்கவும். முஷர∴ப் வருணிக்கும் தியாகிகளின் தோளில் எப்போதும் ஏகே - 47 இருக்கும். கையெறி குண்டுகளுடன் அதிகம் சிநேகம் கொண்டவர்கள். கொலை, தீவைப்பு, கற்பழிப்பு என்கிற மூன்று அம்சத் திட்டங்களில் விடாப்பிடியானவர்கள். காஷ்மீரின் எல்லைப்புற மாவட்டங்களில் வாரத்துக்கு எட்டுநாள் அரங்கேறும் மேற்படி சம்பவங்களில் பெரும்பாலானவற்றுக்கு இந்தத் தியாகிகளே பொறுப்பாளர்கள் என்று சரித்திரம் சுட்டிக் காட்டுகிறது.

ஆனால், பாகிஸ்தான் உளவுத்துறை கூப்பிட்டு ஒரு ப்ராஜக்ட் மாதிரி அளித்துவிட்டால், தமது இந்த மூன்று அம்ச நடவடிக்கைகளுக்குத் தாற்காலிக விடுப்பளித்துவிட்டு, காஷ்மீருக்காகப் போராடத் தயாராகிவிடுவார்கள்.



இவர்கள் லஷ்கர் ஆட்கள் அல்லர். பிற எந்த ஒரு போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. போராளி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரியான காரியங்களில் பெரும்பாலும் இறங்கமாட்டார்கள். வெறும் கூலிக்காரர்கள் போய் ஊளையிட்டுவிட்டு வா என்றால், ஊளையிட்டுவிட்டு வருவார்கள். கலவரம் செய் என்று உத்தரவிட்டால், கலவரம் செய்வார்கள். கொளுத்து என்றால், கொளுத்துவார்கள். அடி என்றால், அடிப்பார்கள். ஆனால், கூலியை ஒழுங்காகக் கொடுத்துவிட வேண்டும்.

ஆதிவாசிகள். படிப்பறிவில்லாதவர்கள். முரட்டுத்தனம் என்பது சுபாவமாக ஆகிப்போனவர்கள். அவர்களது அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு, இம்மாதிரியான ஊடுருவல்களுக்குக் கேடயமாக்கிக் கொள்வது பாகிஸ்தானின் வழக்கம். முன்பே சொன்னதுபோல் இது இன்று நேற்று நடக்கிற காரியமல்ல. 1948 முதல்.

அப்படியொரு ஆதிவாசி ஊடுருவலுடன் தொடங்கியதுதான் கார்கில் யுத்தம். தொடங்கி வைத்தவர் பர்வேஸ் முஷரஃப். ஒரு பக்கம் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியப் பிரதமரை வரவழைத்துவிட்டு, இதென்ன கூத்து என்று அமெரிக்கா உள்பட பாகிஸ்தானின் நட்பு நாடுகளே கேட்கத் தொடங்க, ஊடுருவல், யுத்தமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றதும், இந்திய வீரர்கள் சிகரங்களின் உயரங்களில் இருந்து கொண்டு பாகிஸ்தானியர்களை வீழ்த்த பாடுபட்டதும், தினசரி செய்தித்தாள்கள் மூலமும் தொலைக்காட்சி மூலமும் நம் கவனத்துக்கு வந்தது. பல இடங்களில் இந்தியா வென்றது. சில இடங்களில் பாகிஸ்தான் வென்றது. பொதுவாக, காஷ்மீர் விஷயத்தில் மட்டும் வெற்றி மற்றும் தோல்வியின் சதவிகிதங்கள் துல்லியமாக வழங்கப்படுவதில்லை. இது மரபு. இங்கு மட்டுமல்ல. பாகிஸ்தானிலும் கூட.

அது பிரச்னையில்லை. நமக்கு இங்கே முக்கியம் என்னவெனில், கார்கில் சம்பவம் ஓர் அப்பட்டமான நம்பிக்கை மோசடி என்று சர்வதேச அளவில் பாகிஸ்தானுக்குக் கடும் கண்டனத்தைப் பெற்றுத் தந்தவுடன், அமெரிக்க அதிபர், நவாஸ் ஷெரீஃபைக் கூப்பிட்டு மிரட்டி உடனடியாக யுத்தத்தை நிறுத்தச் சொல்லி அனுப்பி வைத்தார்.

அமெரிக்கா இப்படியொரு காரியத்தைச் செய்யும் என்று பாகிஸ்தான் எதிர்பார்த்திருக்க முடியாது. பதறிப்போன நவாஸ் ஷெரீஃப், முதலில் தனக்கு கார்கில் விஷயமே தெரியாது என்று சொல்லிவிட்டு, அப்படிச் சொன்னது ஒரு தேசிய அவமானமல்லவா என்று உணர்ந்து, சொன்னதை மாற்றிச் சொல்ல முயற்சி செய்து, பரிதாபகரமாகத் தோற்று, அவசர அவசரமாக முஸஃபராபாத்துக்கு விரைந்து சென்றார்.

எல்லையில் அப்போது முகாமிட்டிருந்த பர்வேஸ் முஷரஃபைச் சந்தித்து, காலைக் கையைப் பிடித்து, 'அப்பா தாயே' என்று கெஞ்சி, யுத்தத்தை நிறுத்திவிடச் சொல்லிக் கேட்டுக் கொண்டார்.

இதைக் கொட்டை எழுத்தில் படியுங்கள். உண்மையில் முஷரஃபுக்கு கார்கிலின் வெற்றியல்ல நோக்கம். நவாஸ் ஷெரீஃபின் சரிவு ஒன்றுதான் நோக்கம்.

பாகிஸ்தான் மக்கள் என்ன நினைப்பார்கள்? நமது ராணுவத் தளபதி துணிச்சலுடன் காஷ்மீருக்காக ஒரு யுத்தம் செய்துகொண்டிருக்கிறார். வீரமற்ற பிரதமர், அந்த யுத்தத்தைப் பாதியில் நிறுத்தச் சொல்லி வற்புறுத்துகிறார். இதுதானே? இப்படித்தானே?

அப்படித்தான் நினைத்தார்கள். முஷரஃபுக்கென்ன? 'பிரதமரைக் கேட்டுக்கொண்டுதான் யுத்தத்தை ஆரம்பித்தேன்' என்று சொல்லிவிட்டு, அவர் சொன்னதால் நிறுத்திவிட்டதாக அறிவித்துவிட்டுப் போயேவிட்டார்.

விளைவு, நவாஸ் ஷெரீஃபுக்கு ஒரே நாளில் தேசம் முழுதும் மக்கள் செல்வாக்கு

அதலபாதாளத்துக்குச் சரிந்தது. அதே செல்வாக்கு அப்படியே இடம் பெயர்ந்து, தளபதி முஷரஃபின் தொப்பிக்குள் ஏறிக்கொண்டது. இது நவாஸ் ஷெரீஃபுக்குப் பிடிக்கவில்லை. அவர் முஷரஃபை ஓரம் கட்டி, ஒதுக்கி, பதவி இறக்கிவிடப் பார்த்தார். அதற்குள் ராணுவத்தின் முழு ஒத்துழைப்பையும் நம்பிக்கையையும் பெற்றுவிட்டிருந்த முஷரஃப், நவாஸை எப்படி முறியடித்து, பதவியிலிருந்து விலக்கி, தான் ஆட்சிக்கு வந்தார் என்பதெல்லாம் இங்கே வேண்டாத வேலை.

விஷயம் என்னவென்றால், இந்தச் சம்பவத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்த லஷ்கர் இ தொய்பா, மிகுந்த அருவருப்புணர்வை அடைந்தது என்பதுதான்.

காஷ்மீர் என்பதை ஒரு மண்ணாக மட்டும் நினையாமல், தம் உயிரின் ஒரு பாதியாக நினைக்கும் விதத்தில் அவர்கள் முல்லாவினால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். காஷ்மீருக்காக பாகிஸ்தான் ஒரு யுத்தத்தைத் தொடங்குகிறது என்று தெரிய வந்தபோது, தன்னால் பாகிஸ்தான் ராணுவத்துக்கு எந்தெந்த வகையிலெல்லாம் உதவி செய்யமுடியும் என்றுதான் லஷ்கர் போராளிகள் பார்த்தார்கள்.

உதவவும் செய்தார்கள். ஊடுருவலின் தொடக்கத்தில் லஷ்கர் ஆட்கள் இல்லையே தவிர, யுத்தம் சூடுபிடித்தபோது லஷ்கர் மட்டுமல்லாமல், பெரும்பாலான பாகிஸ்தான் தீவிரவாத இயக்கங்களின் பிரதிநிதிகள், கார்கிலின் பனிச் சிகரங்களுக்கு பீரங்கிச் சூடு வழங்கிக் கொண்டுதான் இருந்தார்கள். இது பாகிஸ்தான் அரசுக்கும் தெரியும், இந்திய ராணுவத்துக்கும் தெரியும்.

அன்றைய தேதியில் அவர்கள் முஷரஃபை அப்படி நம்பினார்கள். காஷ்மீரை எப்படியாவது மீட்டு பாகிஸ்தானுடன் இணைப்பதற்குக் கடவுள் அனுப்பி வைத்த தூதர் என்றே கருதினார்கள். முஷரஃபின் பதவிக்குறி அவர்களுக்குத் தெரியாது. விரைவில் ராணுவத்திலிருந்து அவர் அரசியலுக்கு இடம்பெயர வகுத்திருந்த திட்டம் தெரியாது. அதற்கு காஷ்மீர் ஒரு தொடக்கப் புள்ளி என்பது தெரியாது.

தேசப்பற்று மிக்க ராணுவத் தளபதி. விளக்கெண்ணெயில் ஊற வைத்த வாழைப்பழம் போல் ஒரு பிரதமர். இருவரில் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற கேள்வி வந்தபோது, அவர்கள் சற்றும் யோசிக்காமல் தளபதியின் பக்கம் நின்றார்கள்.

கார்கில் யுத்த காலத்தில் மட்டுமல்ல. யுத்தம் முடிந்தபின் பாகிஸ்தானில் நடைபெற்ற யுத்த விசாரணைகள், அலசல் கமிட்டிகளின் அறிக்கைக் கணைகளின் காலத்திலும் அவர்கள் முஷரஃபையே நம்பினார்கள். இலங்கைக்குப் போய்விட்டு அவர் பாகிஸ்தான் திரும்பியபோது, நடுவானில் அவரது விமானத்தை நிறுத்தி, இறங்கவிடாமல் செய்தார் நவாஸ் ஷெரீஃப் என்கிற தகவல் வந்தபோது, முஷரஃபை ஒரு ஹீரோவாகவும் ஷெரீஃபை ஒரு வில்லனாகவும் இயல்பாக ஏற்றுக்கொண்டு, அப்போதும் முஷரஃபின் பக்கத்தில் நிற்க முடிந்தது.

ஆனால், எப்போது முஷரஃப் சர்வதேச நிர்ப்பந்தங்களால் பாகிஸ்தானில் செயல்பட்டுக்கொண்டிருந்த தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கத் தொடங்கினாரோ, அப்போது அவரது சாயம் வெளுத்துப் போனது. அவர் ஓர் அரசியல்வாதி. அவரும் ஓர் அரசியல்வாதி.

அவருக்கு ஆட்சியில் நிலைப்பது முக்கியமாக இருந்தது. அமெரிக்காவின் அச்சுறுத்தலைச் சமாளிக்க வேண்டியது மிக அவசியமாக இருந்தது. ஆட்சிக்கு வந்த சூட்டில், ஆப்கனிஸ்தானில் ஒரு யுத்தம் வந்துவிட்டது. அல் காயிதாவுக்கான வேட்டை. பாகிஸ்தான் விமானத் தளங்களைத்தான் அப்போது அமெரிக்க ராணுவம் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தது. ‘நீ என் பக்கம் நிற்கிறாயா? அல்லது எதிரியின் பக்கம் நிற்கிறாயா?’ என்று பி.எஸ். வீரப்பா குரலில் இரக்கமே இல்லாமல் கேட்டது.